REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 14உ புதன் (30—11—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 15உ வியாழன் (1—12—55) [இதழ் 144

அற்ப ஆயுள் நிலை நீடிக்கிறது!

பாரிஸ், நவ. 29—

கடந்த ஒன்பது மாத காலமாக பிரெஞ்சு ஆட்சிப் பொறுப்பில் இருந்துவந்த எட்கார் பாரேயைப் பிர மாராகக் கொண்ட மந்திரி சபை இன்று பிரெஞ்சு தேசிய சட்டசபையில் நம்பிக்கை தீர்மானத்தின் மீது நடைபெற்ற வாக்கெடுப்பின்போது வீழ்ச்சியுற்றது. சர்க்காருக்கு எதிராக 318 வாக்குகளும், சர்க்காருக்கு ஆதரவாக 218 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

அரசியல்சட்டப்படி இப்போது பிரதமர், மக்கள் சபையைக் கலைத்துவிடுமாறு, குடியரசுத் தலைவருக்கு சிபாரிசு செய்யலாம்.

'திராவிடத்தை மீட்பதற்கு வீரர்களைத் தாரீர்'

'பிரெஞ்சு ஆதிக்கத்தை வீழ்த்தியவர்களே, தாயகத்தின் இருளை அகற்ற வாரீர்'

புதுவையில் அண்ணா முழக்கம்

"புதுவை மக்கள் அண்மையில்தான் ஒரு பெரும் அரசியல் கொந்தளிப்பில் சிக்கி தங்கள் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பெரும் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு, பிரெஞ்சு ஆதிக்கப் பிடியினின்றும் விடுபட்டிருக்கின்றனர்.

"புதுவையில் உள்ள எல்லா அரசியல் கட்சியினரையும், அவர்களது தியாகங்களுக்காக—விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெரும் நோக்கத்திற்காக நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

"புதுவை மக்களின் விடுதலை ஆர்வம்—சுதந்திரத் தாகம் தமிழகத்தில் உள்ள எங்களுக்கு நல்ல உற்சாகத்தையும், ஆர்வத்தையும், எழுச்சியையும் தந்து வந்திருக்கிறது.

"இப்போது விடுதலைக் காற்றை நுகர்ந்துகொண்டிருக்கிற நீங்கள், தாயகத்தின் அடிமை நிலையை அகற்றுவதற்காக நடத்திய விடுதலைப் போராட்டம், பிற நாட்டு விடுதலைப் போராட்டங்களைக்காட்டினும் குறைவான பயங்கர விளைவுகளைக் கொண்டதாயிருந்தது; அத்தகு சிறப்பு மிக்க விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட எல்லாக் கட்சியினரையும்—கம்யூனிஸ்டுக் கட்சியினர் உட்பட—நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

"நீங்கள் இன்று பிரெஞ்சுப் பிடியினின்றும் விடுபட்டவர்களாக விளங்குகின்றீர்கள்; அந்த விடுதலைக்காக எத்தனை ஆர்வத்தோடு உழைத்தீர்களோ, அதே ஆர்வத்தோடு—உற்சாகத்தோடு, தாயகத்தை—திராவிடத்தைக் கப்பியிருக்கிற இருளை அகற்ற—வடநாட்டு ஆதிக்கப் பிடிப்பை ஒழிக்கவும் நீங்கள் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"பிரெஞ்சுப் பிடியை அகற்றிய விடுதலை உணர்வோடு இங்கு கூடியிருக்கிற நீங்கள், திராவிடத்தின் விடுதலைக்காக எதிர்காலத்தில் நடைபெறும் போராட்டங்களில் கலந்துகொள்ள குறைந்தது ஆயிரம் பேரையாவது அனுப்பித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"'நாங்கள் இப்போதுதானே பெரிய போராட்டத்தில் ஈடுபட்டோம்; அதற்குள்ளாகவே மீண்டும் எங்களைப் போராட்டத்தில் ஈடுபட அழைக்கிறீர்களே!'—என்று நீங்கள் எண்ணக் கூடும்.

"பட்டாளத்தைக் கண்டு பயப்படுபவர்களை—களமே காணாதவர்களை—போராட்டம் என்றால் நடுங்குபவர்களை அழைப்பதைக்காட்டிலும், உள்ள உணர்ச்சியும், விடுதலை வேகமும், போராட்ட அனுபவங்களைக்கொண்ட உங்களை அழைப்பது பொருத்தமானதே என்று நான் கருதுகிறேன்.

"பிரெஞ்சு ஏகாதிபத்தியப் பிடிப்பை அகற்றுவதற்காக நீங்கள் திரண்டெழுந்து நடத்திய விடுதலைப் போராட்டத்தின்போது நீங்கள் சிந்திய இரத்தம், நீங்கள் பெற்ற அனுபவம்—இவை எல்லாம், விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எங்களுக்கு மிகப் பயன் தரத்தக்கனவாகும்.

"பக்தர்கள் புனித ஸ்தலங்களுக்குச் செல்வதுபோல—புதுவைக்கு, விடுதலை வேட்கை கொண்ட நாங்கள் வந்திருக்கிறோம்; நீங்கள் உங்களுடைய போராட்ட அனுபவங்களை எங்களுக்குச் சொல்லித்தாருங்கள்; உங்களுடைய கொழுந்துவிட்டெரியும் விடுதலை ஆர்வத்தை—உள்ள உணர்வை—எழுச்சியை திராவிடத்தின் விடுதலைக்காகத் தாருங்கள் என்று கேட்கிறோம்.

"தரணியில் தனிப் புகழ் பெற்ற திராவிடம், இன்று, வடநாட்டவரின் அடிமைக் காடாக—சுரண்டல் பூமியாக விளங்கிக்கொண்டிருக்கிறது. இந்த அடிமை நிலை அகற்ற புதுவை மககள் முன்வர வேண்டுமென அழைக்கிறேன்.

"இங்கே, திராவிட முன்னேற்றக் கழகம் சிறப்புறப் பணியாற்றி வருவது நீங்கள் அறிந்ததே. இந்தக் கூட்டத்தில் எங்களுக்குக் கைத்தறி ஆடையை அணிவித்தார்கள்; மாநில மாநாட்டிற்காக நிதி வழங்கினார்கள்; இவையெல்லாம், இங்கு கழகத்திற்குப் புதுவை மக்கள் நல்ல ஆதரவைத் தருகிறார்கள் என்ற நம்பிக்கையை—புத்துணர்ச்சியை எங்களுக்கு ஊட்டுகின்றன.

"ஆனால், புதுவையிலிருந்து நாங்கள் எதிர்பார்ப்பது, கைத்தறித் துணிகளை அல்ல; காசுகளை அல்ல; ஆனால், தாயக விடுதலைக்காக வீர உணர்வை வேண்டுகிறோம்;

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

மராட்டியரின் பம்பாய் கோரிக்கை

'நிர்ப்பந்தித்துப் பெற விரும்பவில்லை'

சங்கர்ராவ் தேவ் விளக்கம்

"நிர்ப்பந்தத்தினாலோ, கட்டாயத்தினாலோ சம்யுக்த மராட்டியத்திற்கு பம்பாயைத் தலைநகராக்குவதை நான் விரும்பவில்லை; ஏனெனில், நிர்ப்பந்தத்தினாலும், கட்டாயத்தினாலும் ஒன்றைப் பெறுவது, சம்யுக்த மராட்டியத்திற்கும், ஜனநாயகத்திற்கும் தீங்கு பயப்பதாகும்,"

என்று, சம்யுக்த மராட்டிய பரிஷத் தலைவரான சங்கர்ராவ் தேவ் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

எழுந்துள்ள சிக்கலுக்கு பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்குவதல்ல சரியான பரிகாரம் என்றும், ஜான் மத்தாய், வித்தல் சந்தவர்க்சார் போன்ற வர்த்தக சமூகத் தலைவர்கள்கூட இந்தப் பரிகாரத்தை ஏற்கவில்லை என்றும், எனவே பம்பாயைப் பொறுத்தமட்டில் ஒரு நகரத்தை ஒரு மாநிலமாக உருவாக்குவது உசந்ததல்ல என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

அகாலி தளத்தவர் மீது மீண்டும் தாக்குதல்

மகா பஞ்சாப் முன்னணியினர் பிரேத ஊர்வலத்தில் புகுந்து கலாட்டா

போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

அமிர்தசரஸ், நவ. 29—

நகரின் நிமக்மந்தி என்ற பகுதியில் இன்று மீண்டும் அகாலி தளத்தவருடன் மகாபஞ்சாப் முன்னணியினர் மோதிக்கொண்டதினால், அவர்களைக் கலைக்க போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்திருக்கின்றனர்.

நேற்று நடைபெற்ற மோதுதலின்போது பெற்ற காயங்களுக்குப் பலியான பிரதாப்சிங் என்பாரது சடலத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர் அகாலி தளத்தவர். பிரேத ஊர்வலம் நிமக்மந்தி பகுதியை அடைந்தபோது, அகாலி தளத்தவரின் கோஷங்களுக்கு எதிர் கோஷங்களைக் கிளப்பி மகாபஞ்சாப் முன்னணியினர் மோதுதலைத் துவக்கியிருக்கின்றனர்.

பின்னர், இருதரப்பாரும் கல்லெறிந்துத் தாக்கிக்கொண்டிருக்கின்றனர். பெரும் சேதத்தைத் தடுக்க போலீசார் ஏராளமான கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியிருக்கின்றனர்.

அகாலி தளத்தவர் நடத்திய ஊர்வலத்திற்கு தலைவர் மாஸ்டர் தாராசிங் தலைமை வகித்துச் சென்றிருக்கிறார்.

மருத்துவக் கப்பல்

இந்தியாவிற்கு ஆஸ்திரேலியா வழங்குகிறது

சிட்னி, நவ. 29—

அந்தமான், நிகோபார் தீவுகளில் உபயோகிப்பதற்கென ஆஸ்திரேலியா 100 டன் எடையுள்ள மருத்துவக் கப்பல் ஒன்றை இந்தியாவிற்கு வழங்கியிருப்பதாயும், அதனை ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியத் தூதவர் ஜெனரல் கரியப்பா ஏற்றுக்கொண்டுவிட்டதாயும் தெரியவருகிறது.

கொழும்புத் திட்டப்படி வழங்கப்படும் இந்தக் கப்பல், சுமார் 40.000 முதல் 50,000 ஆஸ்திரேலிய பவுன் வரை பெறக்கூடியது என்றும் தெரியவருகிறது.

போலீஸ் வண்டியில் ரஷ்ய தலைவர்கள் பிரயாணம்!

கல்கத்தாவில் ஊர்வலம் பாழ்!

கல்கத்தா, நவ. 29—

கல்கத்தா வந்து சேர்ந்த சோவியத் தலைவர்கள், விமான நிலையத்திலிருந்து இராஜ பவனத்திற்கு ஊர்வலமாகச் செல்கையில், வழிநெடுகக் கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆர்வமிகுதியாலோ, ஒழுங்கு கட்டுப்பாடு இன்மையினாலோ தலைவர்களைச் சூழ்ந்துகொண்டு காரை நகரவிடாது செய்திருக்கின்றனர். இதன் விளைவாக, ரஷ்யத் தலைவர்களை பாதுகாப்புடன் கூடிய ஒரு போலீஸ் வண்டியில் அதிகாரிகள் ஏற்றி, கதவுகளை அடைத்துக் கூட்டிக்கொண்டு சென்றிருக்கின்றனர்.

தலைவர்களைக் காண முடியாது இதர இடங்களில் தவித்த மக்களைப் பார்ப்பதற்கே பரிதாபகரமாயிருந்ததாம்; என்றாலும், இதன் விளைவாக கூட்டத்தினர் எந்தவித அசம்பாவித வேலைகளிலும் ஈடுபடவில்லை என்றும், இராஜபவனத்திற்கு வெளியே சில ஆயிரம் மக்கள் கூடிநின்று, ரஷ்யத் தலைவர்களைப் பார்க்காமல் போவதில்லை என்று இரண்டு மணி நேரத்திற்கு மேலாக விம்பு பேசி நின்றனரென்றும் கூறப்பட்டுள்ளது.

கல்கத்தாவில் ரஷ்யத் தலைவர்கள் கலந்துகொள்வதாகயிருந்த இரு பார்வையிடும் நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தத் தகவலைத் தந்த மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் பி. சி. ராய், 'மதிப்பிற்குரிய நமது விருந்தாளிகள், ஒரு போலீசார் வண்டியில் பிரயாணம் செய்ய நேர்ந்தமைக்காக நான் மிக வெட்கப்படுகிறேன் — வருந்துகிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

நாளைய தினம் சோவியத் தலைவர்கள் இராணுவப் பயிற்சி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுவதாயிருக்கிறது. அப்போது பிரதமர் நேருவும் அதில் கலந்துகொள்ளுவார். அந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

சவூதிஅரேபியமன்னர்அன்பளிப்பு

புதுடில்லி, நவ. 29—

இந்தியப் பிரதமரின் நிவாரண நிதிக்கு, இந்தியாவிற்கு வருகை தந்துள்ள சவூதி அரேபிய மன்னர் ரூ. 3 - இலட்சம் நன்கொடை தந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஆக்க வேலைக்கு அணு சக்தி

ரஷ்யா தகவல் தருமாம்!

புதுடில்லி, நவ. 29—

அணு சக்தியை சமாதான காரியங்களில் பயன்படுத்துவதுகுறித்த எத்தகையத் தகவல்களையும் தருவதற்கு ரஷ்ய சர்க்கார் தயாராக இருப்பதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இப்போது டில்லியிலுள்ள ரஷ்ய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் பிரதிநிதிகள் தகவல் தந்து உதவ முன்வந்துள்ளனர் என்றும் தெரியவருகிறது.

அணு ஆயுத உற்பத்தி

இரு தரப்பு கருத்துக்கள்

லண்டன், நவ. 29—

"அமெரிக்காவும் பிரிட்டனும் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து அவற்றைச் சோதனை செய்யும்போது, ரஷ்யாவும் அவற்றை உற்பத்தி செய்வதையோ, சோதனை நடத்துவதையோ நிறுத்திவிட முடியாது. ஆனால், அணு ஆயுதங்கள் வைத்திருக்கும் நாடுகள் அணு ஆயுதங்களைப் பரிசோதிப்பதை நிறுத்திவிடுமாறு உறுதி கூற ரஷ்யா யோசனை தெரிவிக்கிறது. மற்ற நாடுகள் அதற்குச் சம்மதித்தால் உடனே நாங்களும் அவ்வாறு செய்யத் தயாராக இருக்கிறோம்,"

என்று, மாஸ்கோ வானொலியில் கூறப்பட்டிருக்கிறது.

★

அமெரிக்கா ஆலோசனை செய்கிறதாம்!

வாஷிங்டன்—

"அணு ஆயுதச் சோதனைகளை நிறுத்திவிடுவது பற்றி அமெ

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 30-11-'55 புதன்

விளக்கம் வேண்டும்

திருநெல்வேலி - தூத்துக்குடி பகுதியில் புதிதாக சோடா ஆஷ் தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட இருக்கிறது. மேலும், அதற்குத் தொடர்புடைய சில தொழில்களும் துவங்கப்பட இருக்கின்றன.

மூலத் தொழிலான சோடா ஆஷ் தொழிலிலும், துணைத் தொழில்களிலும் ஏறத்தாழ பத்தாயிரம் தொழிலாளர்கள் வரை வேலை செய்வார்கள். அத்தொழிலுக்கான மூலதனத்தில் ஒரு சிறு பகுதியை, அதாவது ரூபாய் பத்து இலட்சம் வரை சென்னை அரசாங்கம் கொடுத்தும் இருக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் இரண்டு சோடா ஆஷ் தொழிற்சாலைகள் துவங்கப்பட இருக்கின்றன. முதல் முதலாகத் துவங்கப்பட இருக்கும் இத்தொழிற்சாலை, அவ்விரண்டில் ஒன்றாகும். மற்றொன்று வடநாட்டில் ஏதோ ஒரு இடத்தில் துவங்க இருக்கிறது.

தூத்துக்குடி தொழிற்சாலையைத் துவங்குவதற்கு, போதிய முதலீடு செய்ய சக்தி வாய்ந்த தொழில் நிறுவனங்களின் உதவியை, இந்தியப் பேரரசு நாடியது. பற்பல தொழில் நிறுவனங்கள் அதற்குரிய மனுச் செய்துகொண்டன.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதிலும், குறிப்பிட்ட எந்தப் பகுதியிலாவது பெருந் தொழில்களைத் துவங்க வேண்டுமானால், அவைகளை அனுமதிக்க வேண்டிய உரிமையை சட்டப்படி கொண்டிருப்பது இந்தியப் பேரரசேயாகும். அவ்வுரிமை, மாகாண அரசாங்கங்களுக்கு அறவே கிடையாது. சென்னை மாகாண ஆட்சியும் அதே நிலையில் இருப்பதுதான்.

தொழிற்சாலையைத் துவங்குவதற்குக் கோரிய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை ஆராய்ந்து பார்த்து, இறுதியாக ஒரு விண்ணப்பதாரருக்கு அனுமதி தரப்படுவதற்குமுன், மாகாண அரசாங்கங்களின் கருத்தறிய வேண்டிய கடமை இந்தியப் பேரரசிற்கு உண்டு. ஆனால், மாகாண அரசாங்கங்கள் கூறிடும் கருத்துக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய கட்டாயம் இந்தியப் பேரரசிற்குக் கிடையவே கிடையாது. தாம் விரும்பினால், மாகாண ஆட்சிகளின் உரையை அலட்சியப்படுத்திவிட்டு, தம்மிச்சையாக நடந்துகொள்ள இந்திய அரசுக்கு முழு உரிமை உண்டு. அப்போக்கைத் தட்டிக் கேட்க மாகாண ஆட்சிகளுக்கு ஒரு துளி அதிகாரமும் கிடையாது.

அவ்வாறு மனுச் செய்துகொண்ட தொழில் நிறுவனங்களில் சென்னை மாநிலத்தைச் சேர்ந்த நிறுவனங்களும் இருந்தன. அதேபோன்று, வடநாட்டு நிறுவனங்களின் விண்ணப்பங்களும் இருந்தன.

சோடா ஆஷ் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு மனுச் செய்துகொண்ட சென்னை மாநிலத்தைச் சேர்ந்த தொழில் நிறுவனம் ஒன்றிற்கு முதல் முதலாக இந்தியப் பேரரசு அனுமதி கொடுத்துவிட்டது. மற்ற விண்ணப்பங்கள் ஒதுக்கித் தள்ளிவிடப்பட்டன.

தூத்துக்குடியில் சோடா ஆஷ் தொழிற்சாலையை இப்பொழுது முதல் போட்டுத் துவங்க இருப்பது, இந்தியப் பேரரசின் அனுமதியை முதல் முதலாகப் பெற்ற சென்னை மாகாணத்தைச் சேர்ந்த அதே தொழில் நிறுவனம் அல்ல. வடநாட்டைச் சேர்ந்த புதிய தால்மியா நிறுவனம் ஒன்று அத்தொழிற்சாலையை ஆரம்பிக்கப்போகிறது. சோடா ஆஷ் தொழிற்சாலையைத் துவங்க முதல் முதலாக அனுமதிக்கப்பட்டிருந்த சென்னை மாகாண தொழில் நிறுவனத்திடமிருந்து அவ்வனுமதி பறிக்கப்பட்டுவிட்டது.

இதுகுறித்து, சட்ட சபைக் கூட்டத்தில் கேள்வி மேல் கேள்விகள் எழுப்பப்பட்டன. சோடா ஆஷ் தொழிற்சாலையைத் துவங்கி செயலாற்றுவதற்குத் தேவைப்படும் தொழில் நுணுக்கம் கற்றுள்ளவர்கள் சென்னை தொழில் நிறுவனத்திடம் இல்லாததினால், முதல் முதலாக அந்த நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த அனுமதியை இந்தியப் பேரரசு ரத்து செய்துவிட்டு, அந்தத் தொழில் நிபுணர்களைக் கொண்டிருக்கும் வடநாட்டு நிறுவனத்திற்கு இரண்டாவதாக அனுமதி தரப்பட்டிருக்கிறது என்று நிதி அமைச்சர் பதில் கூறியுள்ளார்.

சென்னை தொழில் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்ட அனுமதியை ரத்து செய்துவிட்டு, வடநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு இரண்டாவதாக அனுமதி கொடுக்க முன்வந்த இந்தியப் பேரரசு, தொழிற்சாலையை நிறுவ விண்ணப்பித்துக் கொண்டபொழுதே, விண்ணப்பம் செய்துகொண்ட நிறுவனங்களிடம் அத்தொழிலுக்கு இன்றியமையாத் தேவைகளாக தொழில் நிபுணர்களும், மூலதனமும் போதிய வகையில் இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து அறிந்துகொண்டிருக்க வேண்டும். அதன்பிறகே குறிப்பிட்ட ஏதாவது ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, தொழிலை நிறுவ அதற்குரிய உரிமையை வழங்கி இருக்க வேண்டும். இதுதான் ஒரு திறமையான அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய செயலுமாகும்.

ஆராய்ந்து பார்க்காமல் அனுமதி கொடுப்பதும், பிறகு அதை ரத்து செய்துவிட்டு வேறு ஒரு நிறுவனத்திற்குத் தொழில் நிறுவ அனுமதி தருவதும் முறையற்ற செயலாகும். அதுவுமன்றி, விண்ணப்பம் கொடுத்துக்கொண்ட தொழில் நிறுவனங்களுக்கும், இந்தியப் பேரரசின் பொறுப்பற்றபோக்கினால் அனுமதி பெற்றுவிட்ட சென்னை நிறுவனத்திற்கும் வீண் பணவிரயமும், முயற்சிக் கேடும் ஏற்படாமலும் இருந்திருக்கும்.

சென்னை அரசாங்கத்தைக் கலந்து ஆலோசித்துத்தான் இந்தியப் பேரரசு இத்தவறிய செயலைப் புரிந்து இருப்பதாகவும் அமைச்சர் அறிவித்திருக்கிறார். அதாவது, சோடா ஆஷ் தொழிற்சாலையை நிறுவ முதல் முதலாக அனுமதிக்கப்பட்ட சென்னை நிறுவனத்தின் அனுமதியை ரத்து செய்துவிட்டு, வட இந்திய நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கப்படுவதற்கு முன், சென்னை அரசாங்கத்தைக் கலந்துகொண்டுதான் இந்தியப் பேரரசு இறுதியான முடிவிற்கு வந்ததாக நிதி அமைச்சர் விளக்கம் கொடுத்திருக்கிறார். அவ்விளக்கத்தின்படி பார்த்தால், தொழில் நிபுணர்களைக் கொண்டிராத சென்னை நிறுவனத்திற்கு இந்தியப் பேரரசு அனுமதி அளித்ததும், சென்னை ஆட்சியைக் கலந்துகொண்டுதான் என்று யூகிக்க இடமுண்டு. தொழில் நுணுக்கம் கற்றவர்களைக் கொண்டிராத சென்னை நிறுவனத்திடம் சோடா ஆஷ் தொழிற்சாலையைத் துவங்கும் பொறுப்பை ஒப்படைக்கலாம் என சென்னை அரசாங்கம் இந்திய பேரரசிற்கு எவ்வாறு சிபாரிசு செய்தது என்ற வினவிற்கும் பொருத்தமான விடை வேண்டும். இரண்டாவதாக அனுமதி தரப்பட்டுள்ள வடநாட்டு நிறுவனத்திடம் மட்டும் தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் தேவையான அளவு இருக்கிறார்கள் என்பதை எவ்வாறு நமது நிதி அமைச்சர் முடிவு கட்டுகிறார் அல்லது நம்புகிறார்? வடநாட்டுத் தொழில் நிறுவனத்திற்குள்ள தொழில் தகுதி திறமையை சென்னை ஆட்சியின் சார்பில் நிதிஅமைச்சர் ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வந்து நிச்சயமாகக் கூறுகிறாரா? விளக்கம் தேவை.

சோடா ஆஷ் தொழிற்சாலையைத் துவங்குவதற்காக, சென்னை அரசாங்கத்தின் சிபாரிசுப்படி சென்னை நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்துவிட்ட பின்னர், வடநாட்டு நிறுவனம் 'தக்க'வர்களைக் கொண்டு முயற்சிக்க, வடநாட்டு நிறுவனத்தை ஆதரிக்க வேண்டிய நிலைமை இந்தியப் பேரரசிற்கு ஏற்பட்டிருந்தாலும் ஏற்பட்டிருக்கக்கூடும். அதற்காக, தொழில் நுணுக்கம் தெரிந்தவர்கள் சென்னை நிறுவனத்திடம் இல்லை — வடநாட்டு நிறுவனத்திடம்தான் இருக்கிறார்கள் என்று புகல் கூறுவதாகவும் இருக்கலாம்.

சோடா ஆஷ் தொழிற்சாலையை நிறுவ மேட்டூர் கெமிகல்ஸ் போன்ற தொழில் நிறுவனத்தைக் கலந்துகொண்டு முடிவான சிபாரிசை செய்தீர்களா என சட்டசபையில் நிதி அமைச்சர் கேட்கப்பட்டுள்ளார். கேள்வியில் குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தினிடம் கலந்து பேசப்பட்டது இல்லை என்பதை திட்டவட்டமாகக் கூறுவதற்குப் பதிலாக, சென்னையிலுள்ள தொழில் நிறுவனங்களைக் கலந்துகொண்டுதான் முடிவு கட்டப்பட்டதாக நிதி அமைச்சர் பதில் தந்துள்ளார். அது வெறும் ஐயத்திற்கிடமான பதிலாகவே இருக்கிறது!

சோடா ஆஷ் தொழிற்சாலை ஒன்றை நிறுவ சென்னை நிறுவனம் ஒன்றுக்கு அனுமதி கொடுக்கப்பட்ட பின்னர், அந்த நிறுவனத்திடம் தொழில் நுணுக்கம்தெரிந்தவர்கள் கிடையாது எனக் காரணங் காட்டி, அதனிடமிருந்து, கொடுக்கப்பட்ட அனுமதியைப் பறித்து வடநாட்டு நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைத்திருக்கிறது இந்தியப் பேரரசு. அது பற்றி சென்னை அரசாங்க சார்பில் நிதி அமைச்சர் கூறிய விளக்கமே வெறும் வீராப்பாக இருக்கிறது. சரியான விளக்கம் தேவை. அடுத்த சட்ட சபைக் கூட்டத்திலாவது அதற்குரிய உண்மையான விளக்கத்தைப் பெற முயற்சிக்கவேண்டும் என உறுப்பினர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

அனுமதி பெற்று ஏமாந்திருக்கிற சென்னை தொழில் நிறுவனம் பற்றிய முழு விவரத்தையும் நிதி அமைச்சர் அறிவிக்க வேண்டும்.

அவ்வுண்மை வெளியாகும் அளவிற்கு முயற்சி எடுத்துக் கொள்ளும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

நாட்டுப்பற்றிலும் மிகுந்திருந்த சாதிவெறி!

வ. உ. சி. அனுபவித்த வேதனை

டாக்டர் இராசமாணிக்கம் விளக்கம்

"வ. உ. சி. அவர்கள், கடுஞ் சிறை வாழ்க்கைக்குப் பிறகு, விடுதலை பெற்ற பின்பு, அப்பொழுதிருந்த பெருந் தலைவர்களால் நல்ல முறையில் வரவேற்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அக்காலம், நாட்டுப்பற்றிலும், நாட்டுப்பணியிலும் சாதி வெறி தாண்டவமாடிய காலம். இதனை அவரே காலஞ்சென்ற தமிழ்ப் பெரியார் திரு. வி. க.-விடம் மனம் வருந்திக் கூற நான் கேட்டதுண்டு. 'தம்பி, தேச பக்தியிலும் சாதி வெறி உண்டு என்பதை இப்பொழுதுதான் நான் உணருகிறேன்' என்று அவர் என்னிடம், தம் இறுதிக் காலத்தில் கூறி வருந்தினர். கவனிக்க நாதியற்ற நிலையில், அப்பெரியார் வறுமையால் வாடி மனம் வருந்தி உயிர் விட்டார்.

"ஏழைத் தொழிலாளர் சார்பில் பணம் பெறும்வேலையே வாதிடும் வழக்கம் அவரிடம் இருந்தது. சுருங்கக்கூறின் அவர் ஏழைப்பங்காளராக விளங்கினர். முதல் வகுப்புச் சிறையிலும், இரண்டாம் வகுப்புச் சிறையிலும் இருந்த பிற்காலத் தியாகிகளைப் போன்றவர் அல்லர் வ. உ. சி.; அவர் சிறையில் செக்கிழுத்தார்; மட்டமான உணவும் உண்ண நேர்ந்தது; காற்றோட்டமற்ற அறையில் பல்லாண்டுகள் கழித்தார். அவர் பட்ட இன்னல்களையும், அவர் மீது நடந்த வழக்குகளையும் பற்றி அவர் உயிர்த் தோழராக இருந்த பாரதியாரே மனம் பதறிப் பாடியுள்ளார் எனின், அப்பெரியாரது தியாகத்தினை என்னென்பது!"

—என்று, 18-11-55-ல், திருக்கோவிலூர் மாவட்ட உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வ. உ. சி. விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார்:—

"வ. உ. சி. செய்த நாட்டுத் தொண்டினால் மக்கள் அவரை மறவாது போற்றுகின்றனர். அவர் நாட்டுத் தொண்டுடன் நின்றுவிடவில்லை; தமிழ்த் தொண்டும், சமுதாயத் தொண்டும் மிகச் சிறந்த முறையில் செய்த பெரியாராவார். வழக்கறிஞராக இருந்த வ. உ. சி. செய்யுள் இயற்றும் வன்மையும், தொல்காப்பியம் இளம்பூரணர், உரையைப் பதிப்பிக்கும் ஆற்றலும் பெற்றிருந்தார். பல மேனாட்டறிஞர் கருத்துக்களைத் தமிழ் உரைநடையில் எழுதும் திறமையும் வாய்க்கப்பெற்றிருந்தார். இத்தகைய பெரும் புலவரும் சீரிய வழக்கறிஞருமான வ. உ. சி. 30 ஆண்டுகட்கு முன்னரே சமுதாயச் சீர்திருத்தத்தில் தலைசிறந்து விளங்கினர்.

"அப்பெரியாரது வாழ்க்கை வரலாறு இளைஞர்களாகிய உங்களுக்கு நல்ல படிப்பினையாக அமைய வேண்டும். வழக்கறிஞராகவும், நாட்டுத் தொண்டராகவும் இருந்த அவர், சமுதாயத் தொண்டையும், தமிழ்த் தொண்டையும் செய்தாற்போலவே இளைஞர்களும் எத்தொழிலைச் செய்தாலும் சமுதாயப் பணியையும் மொழிப் பற்றையும் வளர்த்து வர வேண்டும். அளவு கடந்த நிலையில் எதனையும் வெளியில் காட்டி தங்கள் வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது."

மாஸ்கோவில் மின்சார மூளை!

விநாடி ஒன்றுக்கு 8,000 கணக்குகளைச் செய்யக்கூடிய 'மின்சார மூளை' ஒன்றை ரஷ்ய விஞ்ஞான 'அகடமி' உபயோகித்து வருவதாகக் கூறப்பட்டுள்ளது!

ஏராளமானோர் கூடி பல மாதங்கள் கணக்கிட வேண்டிய வேலையை—700 சிறு கோளங்களின் ஆரத்தை—இந்த 'மின் மூளை' சில நாட்களில் கணக்கிட்டு விட்டதாகக் கூறப்படுகிறது!

புதிதாகக் கல்வி பயின்றுள்ள வயதுவந்தோருக்கான சிறந்த புத்தகங்களுக்குப் போட்டிப் பரிசுகள் வழங்குவதற்காக மத்திய சர்க்கார் கல்வி மந்திரி காரியாலயத்தினர் இதுவரை ரூ 32,383 செலவு செய்துள்ளனர். அடுத்த போட்டிக்காக ரூ. 1 இலட்சம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது.

★

வ. உ. சி. வாழ்ந்த வீடு

நினைவுச் சின்னம் ஏற்படுத்த இனமாக அளிக்கத் தயாராம்!

திருவாரூர், நவ. 22—

திருநெல்வேலியை அடுத்துள்ள ஒட்டப்பிடாரத்தில் உள்ள வ. உ. சிதம்பரனார் அவர்கள் குடியிருந்த வீட்டை, அவருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்துவதற்காகச் சர்க்காருக்கு இனமாகக் கொடுக்கத் தாம் தயாராக உள்ளதாக வ. உ. சி. அவர்களுடைய பேரனை திரு. சண்முகசுந்தரம் அறிவித்திருக்கிறார்.

முன்பொரு தடவை காங்கிரஸ்காரர்கள், வ. உ. சி. அவர்களது வீட்டை, இதே காரணத்திற்காக புதுப்பித்துக் கட்ட முன்வந்தார்களென்றும், அப்போது காங்கிரஸ் தலைவராக சத்தியமூர்த்தி இருந்தார் என்றும், வீட்டைப் புதுப்பிக்கும் விழாவையொட்டி 4 ஆயிரம் ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு, அன்று மாலை கால்கோள் விழாவாற்ற திரு. சத்தியமூர்த்தி வெள்ளிக் கரணையில் சிமெண்டைத் தள்ளினர் என்றும், அதுபோது அந்த வெள்ளிக் கரணை திடீரென இரண்டாக ஒடிந்து போய்விட்டது என்றும், வெள்ளிக்கரணை இப்படி இரண்டாக ஒடிந்துபோனது அபசகுனம் என்று காங்கிரஸ்காரர்கள் கருதியதால் விழாவைக் கலைத்துவிட்டனரென்றும், அத்துடன் நினைவுக் கட்டிடம் எழுப்பும் வேலையும் கைவிடப்பட்டது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரி சுரங்கம்

ஜெர்மன் நிபுணர் திட்டம்

இந்திய சர்க்கார் தயக்கத்திற்குக் காரணம் என்ன ?

புதுடில்லி, நவ. 28—

"தொழிற்சாலைகளுக்குத் தேவையான 'லிக்னைட்' என்ற பொருளை நெய்வேலியிலிருந்து தோண்டியெடுக்கும் வேலைக்குத் தேவையான தொழில் நுணுக்க உதவி, தொழிற்சாலை, இயந்திர சாதனங்கள் ஆகியவைகளைத் தருவதற்கு கிழக்கு ஜெர்மன் நிறுவனம் ஒன்று முன்வந்திருப்பது குறித்து இந்திய சர்க்கார் பரிசிலனை செய்து வருகின்றனராம்.

உலகின் வேறெந்த நாடுகளையும் விட கிழக்கு ஜெர்மன் மட்டும்தான் பல்வேறு வகைப்பட்ட தொழில்களிலும் அதிக அளவு 'லிக்னைட்'டை உபயோகிக்கும் நாடு என்று கூறப்படுகிறது.

நெய்வேலி சுரங்கத்தில் ஊறிக்கொண்டிருக்கிற தண்ணீரை அப்புறப்படுத்தி சுரங்க வேலைகளுக்கு எவ்வித தடங்கலும் நிகழாதபடி செய்ய முடியுமென்று அந்நிறுவனம் இந்திய சர்க்காருக்கு உறுதி அளித்திருக்கிறதாம்.

பல மாதங்களாக வெறும் 'சோதனைகள்' மட்டுமே நடைபெற்று, வர வர நெய்வேலி சுரங்க வேலைகள் துரிதம் குன்றிவருவதையும், சுரங்கத்துறையை பொறுத்த வேலைகளில் இந்த நிறுவனம் தேவையான அளவிற்கு அனுபவம் கொண்டுள்ளதையும் இந்திய சர்க்கார் கருத்தில் கொண்டுள்ளனர் என்றும், நெய்வேலி திட்டங்கள் குறித்து நன்ருகப் பரிசீலனை செய்த ஜெர்மன் நிபுணர்கள், வெகு விரைவிலேயே தண்ணீர் அழுத்தத்தினுல் ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்த்துவிட முடியுமென்றும், அவ்வேலை 6 மாதங்களுக்குள் முடிவு பெற்றுவிடுமென்றும் கூறியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஜெர்மனியில் பயன்படுத்தப்படுவதைப்போன்றே நெய்வேலியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் 'லிக்னைட்'டையும் பல துறைத்தொழில்களிலும் பயன்படுத்தலாம் என்றும், அப்படி 'லிக்னைட்' தேவையான அளவிற்குக் கிடைத்தால் ஏராளமான துணைத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த முடியும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்திருக்கிறதாம்.

இதனுல், சேலத்தில் பெருமளவில் காணப்படும் இரும்புக் கனிப்பொருளைபலதொழில்களுக்குபயன்படுத்தி, அதன் மூலம் தென் இந்தியாவை ஒரு பெரிய தொழில் பிரதேசமாகக்கூடிய முக்கியப் பயனும் இதனுல் கிடைக்கக்கூடும் என்றும் அந்நிபுணர்கள் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

கிழக்கு ஜெர்மன் நிறுவனத்தின் இந்த உதவி ஏற்றுக்கொள்ளப்படுமானுல், இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் நெய்வேலித் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் தரப்படும் என்றும், தற்போது இந்திய சர்க்கார், இப்போதே உடனடியாக கிழக்கு ஜெர்மன் நிறுவனத்தின் உதவியை ஏற்றுக் கொள்வதா—அல்லது, சுரங்கத்தில் காணப்பெறும் தண்ணீரை அகற்றும் பிரச்சினைக்குச் சரியான பரிகாரம் கண்டு, சுரங்கவேலைகள் ஆரம்பமான பின்னர் ஏற்றுக் கொள்வதா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

சுரங்கப் பகுதிகளில் உள்ள தண்ணீர் அழுத்த அபாயத்தை வெகுவிரைவிலேயே நிவர்த்தி செய்துவிட முடியும் என்று அந்நிறுவனம் உறுதி தந்திருப்பதாலும், அத்துடன், மிக தளர்நடைபோட்டுச் செல்லும் நெய்வேலி சுரங்கத் தொழிலை, மீண்டும் வேகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாலும், இந்திய சர்க்கார், கிழக்கு ஜெர்மன் நிறுவனத்தின் இந்த உதவியை அனேகமாக உடனடியாகவே ஏற்றுக்கொள்வர் என்று நம்பப்படுவதாகவும் கூறப்பட்டிருக்கிறது.

தெரிந்து கொள்ளுங்கள்

1955—56-ம் ஆண்டுத் திட்டப்படி இரயில்வேக்களுக்குத் தேவைப்படும் போக்குவரத்து சாதனங்களான எஞ்சின்கள், கோச்சுகள், இயந்திரங்கள் முதலியவற்றின் விலை மதிப்பு ரூ. 108·40 கோடி. இதில் 622 இரயில்வே எஞ்சின்கள், 37,600 கூட்ஸ் வாகன்கள், சாதாரணப் பிரயாணக் கோச்சுகள் 1,298 ஆகியவற்றின் விலையும் சேர்ந்திருக்கிறது.

1955 செப்டம்பரில் இந்திய யூனியனில் கடல், தரைச் சுரங்க வரி மொத்தம் ரூ. 14·16 கோடி வசூலிக்கப்பட்டது; இதே மாதத்தில் சென்ற வருடம் வசூலான தொகை ரூ. 13·02 கோடி; அதே மாதத்தில் யூனியன் எக்சைஸ் வரிகள் மொத்த வசூல் ரூ. 12·38 கோடி; 1954 செப்டம்பரில் இத்தொகை ரூ. 8·52 கோடி.

தென் இந்திய இரயில்வே 'லோன் சொசைடி' தேர்தல்

விளக்கமும் - வேண்டுகோளும்-[1]

பொன்மலைத் தோழர்கள் கே. ஏ. சூசையப்பன், வி. இராமானுஜாச்சாரி, டி. சச்சிதானந்தம், திருஞானசம்பந்தம், எம். கோபாலகிருஷ்ணன், சந்திரசேகரன் ஆகியவர்களும், திருச்சித் தோழர்கள் டி. கே. சீனிவாசன், ஜி. இராமச்சந்திரன், எம். முஸ்தாபா உசேன், சி. ஜோசப், ஆர். நாராயணசாமி ஆகியவர்களும் கீழ்க்காணும் வேண்டுகோளை விடுத்துள்ளனர் :—

தென்னிந்திய இரயில்வே லோன் சொசைட்டியின் (Co-operative Credit Society) 36,000-த்திற்கு மேற்பட்ட பங்குதாரர்கள் அனைவரையும் அழைக்கிறோம். நினைத்தால் நெருப்பாக இருக்கும் சூழ்நிலை உருவாகியுள்ள இந்த நேரத்தில் உங்கள் ஒவ்வொருவருடைய உதவியும் தேவைப்படுகிறது.

தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் அக்கிரமங்களை எல்லோருக்கும் தெளிவாக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. காலப்போக்கில் கொஞ்சங் கொஞ்சமாக உருவாகி வளர்ந்த கொடுமைகள், இன்று போராடி ஒழிக்கப்பட வேண்டிய நிலையை அடைந்திருக்கின்றன.

சென்னையிலிருந்து திருவனந்தபுரம் வரையிலும், திருச்சியிலிருந்து மங்களூர் கொச்சித் துறைமுகம் வரையிலும் சிதறிக் கிடக்கும் பங்குதாரர்கள் அனைவரும் ஏககாலத்தில் ஒரே இடத்தில் கூடமுடியாமல் லீவு, போக்குவரத்து வசதிகள் தடையாக அமைந்தன. வெகு தூரத்தில் இருப்பவர்கள் நிலைதான் இப்படியென்றாலும், அருகே திருச்சி, பொன்மலை போன்ற இடங்களில் இருப்பவர்களுக்குக் கூட இதுவரை சொசைட்டியைப் பற்றிய கவனம் ஏற்படவில்லை. இந்த சூழ்நிலை இடந்தேடிகளுக்கு எந்த அளவுக்கு அனுகூலமாகப் பயன்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கும்போது பயங்கரமாகவே தோன்றுகிறது.

உங்கள் பரிசீலனைக்கு வைக்கும் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆராய்ந்து ஒரு நல்ல முடிவிற்கு வரும்படி வேண்டுகிறோம். சில பல ஆண்டுகளாக, இடைவேளை விட்டு நிகழ்ந்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால்தான் எவருக்கும் நமது கோரிக்கை என்னவென்பது விளங்கும் ஆதலால், தொடக்கத்திலிருந்து இன்றுவரை உருவான எல்லா நிகழ்ச்சிகளையும் ஒன்றுவிடாமல் கீழே கொடுக்கிறோம்.

கம்யூனிஸ்டுகளும், 'லோன் சொசைட்டி'யும்

ஏழையின் கண்ணீரையும், இல்லாதவனின் இடுப்பொடிந்த வாழ்வையும், பாட்டாளியின் பரிதாப நிலைமையையும், தொழிலாளி படும் துயரத்தையும் பயன்படுத்தி, அரசியலில் சூதாடித் தோல்வி கண்ட இந்திய கம்யூனிஸ்டுகள், பரிதாபத்திற்குரிய சொசைட்டி பங்குதாரர்களின் அடிப்படை உரிமையில் கைவைக்கும் அளவுக்குத் துணிந்துவிட்டனர்.

கூட்டுறவுச் சங்கங்களைக் கைப்பற்றுவதன் மூலம் கட்சிக்கு ஆதாயமும், கட்சி ஊழியர்களுக்கு வேலையும் தேடிக் கொள்ளலாம் என்று திட்டம் வகுத்திருப்பதைப் போல சில பல இடங்களில் நடத்திக் காட்டி வருவதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். அதே கருத்தில் நம்முடைய 'லோன் சொசைட்டி'யையும் தங்கள் விருப்பத்திற்கு இயல்பாகும் நிறுவனமாக மாற்றுவதில் முனைந்திருக்கின்றனர்.

கூட்டுறவு என்ற சொல்லுக்கே, 'எல்லோரும் ஒன்றுபட்டு பணியாற்றுவது' என்பதுதான் பொருளே தவிர, ஒரு குறிப்பிட்ட கூட்டத்தாருக்கு அனைவரும் சரண் புகுவது என்பதல்ல ; ஆனுல், பரம்பரை பரம்பரையாகத் தங்களுக்கும், தங்கள் சந்ததியாருக்கும் சாசனமாக எழுதி வைக்கப்பட்ட சொத்துதான் நம்முடைய கூட்டுறவு சொசைட்டி என்பதை நிலைநாட்டுவதில் அளவுக்கு மீறிய அக்கரை காட்டுகின்றனர் ; அடிப்படைக் கருத்தையே அலட்சியம் செய்துவிட்டு, எதேச்சாதிகாரத்திற்கு வழிகோலும் இவர்கள் செயலைக் கண்டிக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

'இரயில்வே லேபர் யூனியன்', அவர்கள் ஆதிக்கத்தின்கீழ் இயங்குவதால், அதைக்கொண்டு தங்களுக்கான அனுகூலங்களை அத்துமீறியே சாதித்துக்கொள்ள அவர்களால் முடிகிறது.

அவர்கள் வசமுள்ள 'அச்சக'த்தின் துணையால், ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு, பொய்ப் பிரச்சாரம் செய்யும் வசதி அவர்களுக்கிருக்கிறது. நல்லவர்களைப் பொல்லாதவர்களாக ஆக்கிக் காட்டவும், நயவஞ்சகத்தை நல்ல பண்பாகக் கடைப்பிடிக்கவும் அவர்கள் தயங்கியதே இல்லை. பேரம் பேசுவதிலிருந்து, இலட்சியத்தைச் சோரம் செய்வது வரையுள்ள அத்தனை வழிகளையும் கடைப்பிடிப்பதில் கைதேர்ந்தவர்களான அவர்கள், எந்தவிதமான முறைக்கும் தயாராக இருக்கிறார்கள்.

கடன் வாங்குவதற்கு நான்கே நாள்!

எல்லோரையும் ஏமாற்ற அவர்கள் பயன்படுத்துகிற வாதம், 'நான்கே நாட்களில் கடன் கிடைக்கும்படி செய்தவர்கள் நாங்கள் தான்' என்பதுதான் ; இதைவிட மட்டமான பித்தலாட்டம் உலகில் வேறு எங்கேயும் இருப்பதாகத் தெரியவில்லை

நான்கு நாட்களில் கடன் கிடைக்கும்படி செய்தவர்கள் இவர்களல்ல ; 19—3—51-ல் நடந்த சொசைட்டி நிர்வாகக் குழுக் கூட்டத்தில், திரு. டி பி. மத்தூர் தலைமையில்தான், நான்கு நாட்களில் கடன் கிடைக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'இதுவரை ஏழு நாட்களில் கொடுக்கப்பட்டு வந்த கடன்கள், இனிமேல் ஐந்து நாட்களுக்குள் தரப்படவேண்டும்,' என்பதுதான் அந்தத் தீர்மானம். இதை நிறைவேற்றிய டைரக்டர்கள்—தோழர்கள் அங்குசாமி, பரமசிவன், பத்மநாபன், இராமசாமி, சுப்பையா (முதலியார்), இராசகோபாலன், ஆறுமுகம் (பிள்ளை), கந்தசாமி ஆகியோர்தான்.

இவர்களில், எவரும் 'லேபர் யூனிய'னி'ல் சேர்ந்தவர்களல்லர் ; ஒவ்வொருவரும் அதை எதிர்ப்பவர்கள். ஆட்களை அதிகமாக நியமிக்காமலே இதைச் செய்த பெருமை இவர்களுக்குண்டு.

சூழ்நிலையை எவ்வளவு தூரம் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதிலேயே கவனம் செலுத்தும் இவர்களின் பித்தலாட்டம் இதிலிருந்துதான் தொடங்குகிறது.

சபை கூடுமிடம்

சொசைட்டியின் 'பொதுச் சபைக் கூட்ட'ங்களை நடத்துவதற்காக வழக்கமாகத் தேர்ந்தெடுக்கும் 'திருச்சி ஜங்ஷன் இரயில்வே இன்ஸ்டிட்டியூட்' மிகவும் குறுகலான இடம்; அந்தக் கட்டிடத்தின் 'மெயின் ஹால்' மேடை, இருபுறமுள்ள வராந்தாக்கள் இவற்றையெல்லாம் சேர்த்துக் கட்டிடம் முழுவதும் நிறைந்து வழிவதாக இருந்தாலும், 1,700 பேருக்குமேல் கூடமுடியாது. சிறிய இடம் இவர்களுக்கு மிகவும் வசதியாக அமைந்துவிட்டது. பொன்மலையிலுள்ள சில தொழிலாளிகளையும், சுற்றுப்புறத்திலுள்ள சில தொழிலாளர்களையும் முன் கூட்டியே அழைத்துவந்து கட்டிடத்தை நிரப்பி விடுவார்கள். 'லோன் சொசைட்டி' பொதுச்சபைக் கூட்டத்தைத் தங்கள் கிளைச் சங்கங்களில் ஒன்ருகவே ஆக்கிக்காட்டுவார்கள் ; 'லேபர் யூனியன்' கொடிகளைச் சுற்றிலும் பறக்கவிடுவார்கள் ; கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களில் சிலர் அங்கே வருகை தருவார்கள் ; ஒவ்வொரு 'தோழனும்' ஒரு ஸ்டாலினுக மாறிச் சர்வாதிகாரம் செய்வார் ; எதிர்த்துக் கேட்பவர்களது குரலே காதில் விழாதபடி கூச்சல் போட்டுக் கலவரம் செய்வார்கள்.

சொசைட்டி விதிகளில் பங்குதாரர்களின் உரிமை

இவர்களுடைய அட்டகாசங்களுக்கும் அக்கிரமங்களுக்குமிடையே, நாகரீகத்துக்கும் பண்பாட்டுக்கும் ஓரளவு இடங்கொடுத்த துணை விதி (பை லா) 58 ஒன்றுதான். கலவரம் விளைவிப்போரிடையே நல்லவர்களும் தங்கள் கருத்தைத் தெரிவிக்கும் உரிமையையும், வாய்ப்பையும் அந்த துணை விதி பங்குதாரர்களுக்குக் கொடுத்தது.

'ஒவ்வொரு பிரச்சினையும் கை தூக்குதல் மூலமாகவே முடிவாக்கப்படும்; யாராவது ஒரு பங்குதாரர் கோரினுலும், உடனடியாக இரகசிய ஓட்டு முறை (பாலட்) எடுக்கப்பட வேண்டும்,'—என்பதுதான் அந்தத் துணை விதியின் முற்பகுதி ; உரத்த குரல் எழுப்ப வாய்ப்பில்லாதவர்களுக்குக் கிடைத்த மகத்தான உரிமைச் சாசனம்.

'இந்தச் சலுகை இருப்பதால் தான், எதிர்ப்பவர்கள் வரத்துணிகிறார்கள்; அதையும் ஒழித்துவிட்டால் எவரும் நம்மை ஏதும் செய்துவிட முடியாது,' என்ற காரணத்தால், இரகசிய ஓட்டு முறை இல்லாமலே செய்துவிடத் துணிந்தனர்.

30—1—53-ல் நடந்த விசேடப் பொதுச் சபைக் கூட்டத்தில், விவாதத்துக்குக் கொண்டுவரப்பட்ட 14 துணைவிதி(பை லா)திருத்தங்களில், 'ஒவ்வொரு பிரச்சினையும் கைதூக்குதல் மூலமாகவே முடிவு செய்யப்படும்,' என்பதை மட்டும் உறுதி செய்யும் திருத்தம் புகுத்தப்பட்டது.

அப்போதுதான், திருச்சி, பொன்மலையிலுள்ள பல பங்குதாரர்களுக்கு விழிப்பு ஏற்பட்டது. எதிர்ப்பவர்கள் சிலர்தான் என்ற இறுமாப்பு எந்த அளவுக்குக் கொண்டுபோய் விட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டனர்.

'லேபர் யூனியன்' சார்பில் கைதூக்கி முடிவு செய்வதை ஆதரித்து ஒரு தேதியில்லாத 'நோட்டீசு' வெளியிடப்பட்டது. அதில் மிகவும் முக்கியமான பகுதி :—

"பார்லிமெண்ட் தேர்தல், அல்லது சட்டசபைகளின் தேர்தல்களில் நடப்பது போன்ற மிரட்டல்களும், இலஞ்சப் பயமும் இல்லாததாலும், வருடத்திற்கு ஒருமுறை தேர்தல் நடப்பதின் காரணத்தாலுந்தான் தொழிலாளிகள் கைதூக்கும் முறையை ஆதரிக்கிறார்களேயொழிய, மற்றப்படி மைனுரிட்டிக்கு இடையூறு விளைவிக்கவோ, விரட்டுவதற்காகவோ அல்ல ; ஆகவே, கைதூக்கி வாக்குபோடும் முறை முற்றிலும் மேற்கண்ட காரணங்களால் ஜனநாயகமானது."

இந்த நோட்டீசில் கையெழுத்திட்டிருப்பவர்கள் தோழர்கள் எம். கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. (தலைவர்), கே. அனந்தன்நம்பியார் எம்.பி., (பொதுச்செயலாளர்) இருவருந்தான். சட்டசபை—பார்லிமெண்டு—ஜனநாயகம் ஆகிய இந்த மூன்று சொற்களும், இப்படி சந்தி சிரிக்கும் அளவுக்குப் பயன்படுவது கண்டு உண்மையாகவே வருந்துகிறோம். இவைகளுக்குத் தொடர்புள்ளவர்களே இப்படி எழுதத் துணிந்திருக்கிறார்கள் என்ருல் மற்றவர்கள் நிலையைப்பற்றி நாம் விளக்கத் தேவையிருக்காதென நம்புகிறோம்.

கம்யூனிஸ்டு சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது

இந்தத் திருத்தத்தை எதிர்த்துத் திரண்ட பங்குதாரர்களைச் சமாளிக்கும் சக்தியில்லாததால் அதை அப்போது கைவிட்டனர். ஆனுல் அடுத்த கூட்டத்தை இதற்காகவே கூட்டினர். 10—4—54ல் நடந்த விசேடப் பொதுச் சபைக் கூட்டத்தில் விவாதிக்க எடுத்துக்கொள்ளப்பட்ட திருத்தம் 'கைதூக்குதல் மூலமாகவே ஒவ்வொரு பிரச்சினையும் முடிவு செய்யப்படும்' என்பது மட்டுந்தான். இந்த ஒரே ஒரு திருத்தத்துக்காக ஒரு தனிப் பொதுச் சபையே கூடிற்று.

வழக்கம்போல் கையாளும் குழப்பம், கூச்சல், கலவரம்—இவை மூன்றையும் பயன்படுத்தித் திருத்தத்தை நிறைவேற்றினர். ஆனுல் கூட்டுறவு இலாகா, இதை அனுமதிக்க மறுத்துவிட்டது.

எல்லாப் பங்குதாரர்களும் கூடி முடிவு செய்யும்போதுதான் கை தூக்குதல் முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமே தவிர, திருச்சி, பொன்மலையிலிருக்கும் சிலர்கூடிக் கொண்டு இந்த முறையைக் கையாள அனுமதிக்க முடியாது என்பதுதான் அந்த இலாகாவின் தாக்கீது. '36,000 பங்குதாரர்களின் பிரதிநிதிகளும் இருக்கும் இடத்தில்தான், கை தூக்குதல் முறை செல்லுபடியாகும்' என்ற ஆலோசனையைக் கூட்டுறவு இலாகா இவர்களுக்குத் தெரிவித்தது.

'பிரதிநிதித்துவ சபை' தோற்றம்

அதன் விளைவுதான்—இவர்கள் தங்களுடைய மகத்தான சாதனை எனக் கூறிக்கொள்ளும், 'பிரதிநிதித்துவ சபை' 'கை தூக்குதல்' முறை பற்றிய திருத்தம் கூட்டுறவு இலாகாவால் அனுமதிக்கப்பட்டிருந்தால், 'பிரதிநிதித்துவ சபை' என்ற பிரச்சினையே எழுந்திருக்காது. எப்படியாவது 'கை தூக்குதல்' முறையை மட்டும் அனுசரிக்க வழி செய்துவிட வேண்டுமென்ற எண்ணத்தால் தூண்டப்பட்டதால்தான், பிரதிநிதித்துவ சபையைப் பற்றியே பேசத் தொடங்கினர். ஆனுல், அதிலும் ஒரு தொல்லை தொக்கி நிற்கிறது என்பதை உடனே உணர்ந்தார்கள். 1,500 பேர்களை அழைத்து வந்து செய்கிற அட்டகாசம், 120 பேர்களைக் கொண்ட பிரதிநிதித்துவ சபையில் செய்ய முடியாமல் போய்விடும். தேர்ந்தெடுக்கப்படுகிற 120 பேர்களும் இவர்களுடைய ஆட்களாக இருக்கமாட்டார்கள்; 100-ல் ஒரு பங்கு கிடைத்தாலே அது அளவுக்கு மீறிக் கிடைத்த இலாபம். அப்போது இவர்கள் ஆதிக்கம் அடியோடு ஒழிந்துபோகும் நிலை நிச்சயமாக ஏற்படும். இந்தக் கவலையும் பயமும் அவர்களை எதிர்நோக்கி நின்றன.

(தொடர்ந்து வெளிவரும்)

ரஷ்யத் தலைவர்களுக்கு
சென்னை நகரசபை தந்த வரவேற்பு

புல்கானினுக்கும், குருஷ்சேவுக்கும் சென்னை கார்ப்பொரேஷன் அளித்த வரவேற்புரை வருமாறு:—

சென்னை நகரசபை மேயர், துணைமேயர், ஆல்டர்மென், உறுப்பினர் ஆகிய நாங்கள், மேன்மை மிக்க தங்களை இந்நகரத்திற்கு வருக, வருக என மனம் உவந்து வரவேற்கிறோம்.

ரஷ்ய நாட்டின் தலைவர்களாகிய தங்களை வரவேற்கும்போது, தங்கள் நாட்டு மக்களும், தாங்களும் செய்துள்ள ஒப்பற்ற தியாகங்களும், ஆற்றியுள்ள அரிய பெரிய செயல்களும் நினைவுக்கு வருகின்றன. எங்கள் நாடு, நெடுங்காலம் அன்னிய ஆட்சியிலிருந்து உலகம் கண்டிராத அகிம்சைப் போராட்டத்தின் பயனாக விடுதலை பெற்று, இன்று உரிமை நாடாக விளங்குகிறது. 'நாம் பட்ட துன்பம் மற்ற நாடுகள் படக்கூடாது'— என்ற நல்ல நோக்கத்தால், எங்கள் தலைவர்கள், அடக்கப்பட்ட நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதைக் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். எந்தக் காரணத்தாலும் போர் முதலியவை ஏற்படாதபடி உலக சமாதானத்துக்காகவும் உழைத்து வருகிறார்கள். இந்திய நாட்டின் இத்தகைய உயர்ந்த கொள்கைக்குத் தாங்கள் தொடர்ந்து ஆதரவு தந்து, ஆசியாவின் ஒற்றுமையையும், பெருமையையும் போற்றி வருகிறீர்கள். உலக மாநாடுகளில் ரஷ்யா ஆற்றிய தொண்டும், இந்தியாவுக்கு நல்கிய ஒத்துழைப்பும் இந்த நூற்றாண்டின் வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கவை ஆகும்.

மக்கள் எல்லாரும் பொருளாதார நலம் பெற்று வாழ்வதற்காகத் தங்கள் நாடு ஒருவழியில் முயன்று வெற்றி பெற்றது. எங்கள் பெருமதிப்புக்கு உரிய முதல் அமைச்சர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் நாட்டின் தந்தை காந்தியடிகள் வகுத்த நெறியில் நின்று, இந்த நாடும் பொருளாதார முன்னேற்றத்தை நெருங்கி வருகின்றது.

தங்கள் நாட்டுக் கலைஞர்கள் அளித்த அரிய கலை விருந்தை நுகரும் பேறு இரண்டு ஆண்டுகளுக்கு முன் இந்த நகரத்திற்குக் கிடைத்தது. இங்கு வருகை புரிந்துள்ள தாங்கள் இந்நாட்டின் கலைச் சிறப்புக்கள் சிலவற்றைக் காண்பீர்கள்.

இந்தக் கலைகள் இந்த மாநிலத்தின் வரலாற்றைப் போலவே பழம் பெருமை வாய்ந்தவை; இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் பண்பட்டு வளர்ந்து, இன்றும் எங்களுக்கு இன்பம் தரும் கலைச் செல்வங்களாக உள்ளன. மதுரை, தஞ்சாவூர், மாமல்லபுரம் முதலியவற்றில் உள்ள கலைக்கூடங்கள் இவற்றிற்குச் சான்றாக இருந்து வருகின்றன. எங்கள் முன்னோர் மிக நுட்பமான இசைக் கலையை வளர்த்து, அதை எங்கள் செல்வமாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் நீங்கள் காணும் வானளாவிய கோபுரங்கள், இங்கே வளர்ந்த கட்டிடக் கலையின் அருமையையும், சிற்பக் கலையின் பெருமையையும் விளக்கி நிற்கின்றன. நாட்டை ஆளும் தலைவர் முதல், மண்வெட்டி ஏந்திய தொழிலாளிகள் வரையில், அறிவுத் திறம்பழுத்த அமைச்சர் முதல் கலைக்காகவே வாழ்ந்து மடிந்த சிற்பிகள் வரையில் எல்லா மக்களும் மனம் உவந்து ஒத்துழைத்து, ஆர்வத்தோடு ஆற்றிய தொண்டுகளே இவ்வாறு விண்ணை முட்டி உயர்ந்துள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

மனிதருக்கு மனிதர் சாதி, மதம், வகுப்பு, இனம் என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் இயைந்து வாழவேண்டும்— என்பது, தங்கள் உயர்ந்த கொள்கை. இருபது நூற்றுண்டுகளுக்கு முன்பு இந்தக் கொள்கையுடன் சான்றோர் ஒருவர் இந்த நாட்டில் வாழ்ந்து, 'திருக்குறள்' என்ற ஒப்பற்ற நூலை அளித்திருக்கிறார். அவர் காலத்தில், உலகத்தை ஒரு குலமாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று காணும் பேரொளியும் இந்த நாட்டில் இருந்து வந்தது என்பதை இத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் நகரத்தைப் பற்றிச் சில சொற்கள்; இதை அழகுமிக்க நகரமாக மட்டும் அல்லாமல், வாழ்க்கை வளம் மிகுந்த நகரமாகவும் ஆக்க முயன்று வருகிறோம். குழந்தைகள் ஆடவும், பாடவும் வாய்ப்பும் வசதியும் வளர்த்துத் தருவதோடு, மக்கள் எல்லோருக்கும் வாழ்க்கை நலன்களை விரிவுபடுத்தவும் முயன்று வருகிறோம். சிறப்பு வாய்ந்த கடற்கரை எங்களை என்றும் மகிழச் செய்து வருகிறது. நகரத்து உயிர்க் காட்சி சாலை சிறுவர்களின் பொது அறிவிற்கும் பொழுது போக்குக்கும் பயன்பட்டு வருகிறது. இந்த மாதத்தில் இதன் நூற்றாண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதைச் சென்று கண்டு மகிழ்ந்தவர்கள் எல்லோரும் மறக்க முடியாத வகையில், தாங்கள் தங்கள் நாட்டிலிருந்து அன்போடு அனுப்பிய உயிரினங்கள் காட்சியளித்து வருகின்றன. இந்த அன்பளிப்புக்காகத் தங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

உழைப்பின் உயர்வை நம்பி, உரிமை வாழ்வைத் தொடங்கியுள்ள எங்களுக்குத் தங்கள் மேலான வருகை ஊக்கமும் மகிழ்ச்சியும் தருகின்றது. உலக ஒற்றுமைக்காகவும், மக்கள் முன்னேற்றத்துக்காகவும் ஓயாது உழைத்துவரும் தங்கள் தொண்டு மேன்மேலும் சிறப்படைய வேண்டுகிறோம்.

ரஷ்யத் தலைவர்களுக்கு நடிகர் சங்க வரவேற்பு

சென்னை, நவ. 28—

சென்னைக்கு வந்திருந்த ரஷ்யப் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டு கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் ஆகியவர்களுக்கு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் மலர்மாலையும், தோழியர் டி. ஏ. மதுரம் அவர்கள் பொன்னாடையும் அணிவித்தனர்.

ராஜ பவனத்திலிருந்து பெரம்பூருக்கு வரும் வழியில் மவுண்ட் ரோடு ரவுண்ட் டானாவில் அமைக்கப்பட்டிருந்த மிக அலங்காரமான பந்தலில் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில், ரஷ்யத் தலைவர் இருவருக்கும் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்வரவேற்பில் கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன், எம். ஜி இராமச்சந்திரன், சிவதாணு, சகஸ்ரநாமம், சிவாஜி கணேசன், டி. ஏ. மதுரம், ஆகியோர் உட்பட சுமார் 250-க்கு மேற்பட்ட நடிக, நடிகையர்கள் கலந்து கொண்டனர்.

பந்தலுக்கருகில் ரஷ்யத் தலைவர்கள் வந்ததும், கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும், டைரக்டர் திரு. கே. சுப்பிரமணியமும் அவர்களுக்குப் பெரிய மாலைகள் அணிவித்தனர்; தோழியர் டி. ஏ. மதுரம் அவர்கள், புல்கானினுக்காக என்று கூறி, அவர் உட்கார்ந்திருந்த மோட்டார் காரில் பொன்னாடை போர்த்தினர்.

நடிகத் தோழர் டி. என். சிவதாணு அவர்களும் குருஷ்சேவ் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினர்.

மார்ஷல் புல்கானினும், குருஷ்சேவும் புன்முறுவல்பூத்த முகத்துடன் வரவேற்புகளையும், பொன்னாடைகளையும் ஏற்றுக் கொண்டனர்.

வ. ஆ. தி. மு. க. (கிளை) செயலாளர்களுக்கு

'இதுவரையில் மாநில மாநாட்டின் நிதிப் பங்கை அனுப்பாத கிளைக் கழகச் செயலாளர்கள் 4—12—55-ல் வேலூரிலும், 10—12—55-ல் காங்கேயநல்லூரிலும், 11-12-55-ல் வாணியம்பாடியிலும் நடைபெறுகின்ற நிதியளிப்புக் கூட்டங்களில் தங்கள் தங்கள் கழகத்தின் பங்கைச் செலுத்த வேண்டுகிறேன். செயலாளர்கள் தயை செய்து உடனடியாக நிதி வசூலில் ஈடுபட்டு நம் மாவட்டத்தின் பங்கீட்டுத் தொகையைப் பூர்த்தி செய்து உதவ வேண்டுகிறேன்"

என்று, வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லைசத்தி கேட்டுக்கொள்கிறார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகளுக்கு

"4—12—55 அன்று பிற்பகல் 2-மணிக்கு வேலூர் நகர மண்டபத்தில் மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் பொதுக் குழு உறுப்பினர் தேர்தல் நடைபெறும். மாநில மாநாட்டிற்கு நிதியளிக்காத கிளைக் கழகப் பிரதிநிதிகள் தங்கள் தங்கள் கிளைக் கழகத்தின் பங்கையும், பிரதிநிதிக் கட்டணம் செலுத்தாத பிரதிநிதிகள் கட்டணத்தையும் செலுத்த வேண்டுகிறேன். பிரதிநிதித் தோழர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வர வேண்டுகிறேன்"

என்று வ. ஆ. மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை சத்தி கேட்டுக்கொள்ளுகிறார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

1—12—55 மாலை 6-30 மணிக்கு சென்னை 8-வது வட்ட திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகப் பணி மனை (10, லாயர் சின்னதம்பி முதலித் தெரு)வில் தோழர் சி. சிவானந்தம் தலைமையில் பல தோழர்கள் 'இலக்கியம்' என்னும் பொருள் பற்றிப் பேசுவர்.

கே. கே. நீலமேகம்

உடல் நலக் குறைவால் சென்னை சர்க்கார் பொது மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் 30-11-55 மாலை மருத்துவ மனையிலிருந்து விலகி, 1-12-55 மாலை குடந்தை செல்கிறார். (ந. நி.)

அரசியல் நிர்ணய சபை
உறுப்பினர்கள் கைது

எதிர்க் கட்சியினர் வெளியேற்றம்

கராச்சி, நவ. 29—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் இருவர் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருப்பதற்குத் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவிக்கும் வகையில் எதிர்க் கட்சித் தலைவர் சுகரவர்த்தியும், எதிர்க் கட்சி உறுப்பினர்களும் அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

புதுவையில் அண்ணாதுரை முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"உங்களை நான் திராவிட விடுதலைக்காக நடைபெறும் போராட்டங்களில் ஈடுபடுமாறு அழைக்கும்போது, 'திராவிடத்தில், போராட்டத்தில் ஈடுபட வீரர்களே இல்லையா?' என்று கேட்கத் தோன்றலாம்; நிச்சயமாக இருக்கிறார்கள்.

"கடந்த காலத்தில், தி. மு. கழகம் நடத்திய போராட்டங்களில் 5,000 பேர்வரை—6,000 பேர் என்றுகூடச் சொல்லலாம்—சிறைப்பட்டிருக்கின்றனர்; கல்லக்குடியிலும், தூத்துக்குடியிலும் போலீசாரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆறு பேர்களைப் பலி கொடுத்திருக்கின்றனர்; சதிவழக்குகளினால் இன்னல் பல அனுபவித்திருக்கின்றனர்; 'காங்கிரசை எதிர்த்தான்' என்ற காரணத்திற்காக, பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டான் மஜீத் என்ற இளைஞன்; 'சுயமரியாதைச் சூருவளியாயிருக்கிறார்' என்பதற்காக உடையார்பாளையம் உத்தமன் அடித்துக் கொலை செய்யப்பட்டு, தூக்கிலே தொங்கவிடப்பட்டார்; எண்ணற்ற ஊர்களில் தடியடிகளைத் தாங்கியிருக்கின்றனர்—கழகத் தோழர்கள்; அவர்களுடைய புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன—தடை விதிக்கப்பட்டதுண்டு; ஏடுகளுக்கு ஜாமீன் கேட்கப்பட்டதுண்டு; இப்படி எத்தனையோ அடக்குமுறைகளுக்கு தாயக விடுதலைக்காக ஆளானவர்கள்தான் தி. மு. கழகத்தவர். அந்தத் தியாகத் தழும்புகளைக் காட்டித்தான் உங்களையும் அழைக்கிறேன்—விடுதலைப் போராட்டத்திற்கு!

"உங்கள் உடம்புகளிலும், வடநாட்டு ஆதிபத்தியக்காரர்கள் பொறிக்கும் 'புகழ் தழும்புகள்' ஏற்படட்டும்—என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"'விடுதலைப் போராட்டத்திற்கு வாருங்கள்' என்று நான் அழைக்கும்போது, போராட்டத்தில் ஈடுபட கொடுவாளும், வில்லும் வேலும், துப்பாக்கியும், வெடிமருந்தும் கொண்டு ஈடுபடுகிற போராட்டத்திற்கு அல்ல நான் அழைப்பது; அறவழியில் நடைபெறும் போராட்டத்திற்கு அழைக்கிறேன்.

"துப்பாக்கி கண்டு துவளாமல், தடியடிக்குச் சளைக்காமல், அடக்குமுறைக்கு அஞ்சாமல், அறவழி நின்று போரிடும் நெஞ்சுறுதி கொண்டோர் வேண்டும் என்று கேட்கிறேன்,"

என்று புதுவை ஒதியஞ்சாலைத் திடலில் 27—11—55 அன்று நடைபெற்ற வரவேற்புப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். (பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும். நிகழ்ச்சிகள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.)

சென்னை நகரசபை மேயர்

இராமநாத அய்யர் தேர்வு

சென்னை, நவ. 29—

சென்னை நகரசபைக்கு 1955—56-ம் ஆண்டிற்கு மேயராக வி. ஆர். இராமநாத அய்யர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளாக நடைமுறையிலிருந்து வருகிற 'சாதி முறைப்படி தலைவர் தேர்தல்' என்ற முறையை ஒழித்துவிட வேண்டும் என்று சில உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியுற்றிருக்கிறது.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இராமநாத அய்யரை எதிர்த்து எதிர்க் கட்சியினர் சார்பில் தோழர் எஸ். பக்கிரிசாமி பிள்ளை நிறுத்திவைக்கப்பட்டார்.

ஆனால், இராமநாத அய்யருக்கு 58 வாக்குகளும், பக்கிரிசாமி பிள்ளைக்கு 17 வாக்குகளும் கிடைத்திருக்கின்றன.

உதவித் தலைவராக டாக்டர் கே. பி சாமி என்பார் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இன்று நடைபெற்ற புதிய நகரசபை உறுப்பினர் கூட்டத்தில் 78 உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஐ. நா. முடிவுக்கு மாணவர்கள் எதிர்ப்பு

50,000 - பேர் கொண்ட கண்டன ஊர்வலம்

டமாஸ்கஸ், நவ. 29—

பாலஸ்தீனத்தைப் பிரிவினை செய்வது என்று ஐ. நா. நிறுவனம் முடிவு செய்திருப்பதை எதிர்த்து, சிரியா முழுவதிலுமுள்ள 50,000 மாணவர்களனைவரும் ஒன்று திரண்டு பள்ளிகளை விட்டு வெளியேறி, தெருக்கள் தோறும் ஊர்வலமாகச் சென்றிருக்கின்றனர்.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா, துருக்கி ஆகிய நாடுகளுக்கு எதிராக ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒலி முழக்கம் செய்திருக்கின்றனர்.

காஷ்மீர் சிக்கல்

பேச்சுவார்த்தை நடத்த கபார்கான் வரமாட்டார்

கராச்சி, நவ. 28—

சர்வகட்சி காஷ்மீர் மாநாட்டில், மேற்கு வங்க முதன் மந்திரி டாக்டர் கான் சாகிபுடன், செஞ்சட்டைத் தலைவரான கான் அப்துல் கபார்கானும் இந்தியா சென்று, பிரதமர் நேருவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, காஷ்மீர் சிக்கலுக்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று தெரிவிக்கப்பட்ட யோசனையை கபார்கான் எதிர்த்து நிராகரித்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

மாநாட்டின் இரகசியக் கூட்டம் நடைபெற்றபோது இந்த யோசனை தெரிவிக்கப்பட்டதாம்.

உடனே கபார்கான் எழுந்து, தனது சொந்த நாடான பாகிஸ்தானிலேயே, தான் சந்தேகத்திற்குரியவர்—'துரோகி' என்றெல்லாம் தூற்றப்படும்போது, இந்தியாவிற்கு எப்படிச் செல்ல முடியும் என்று கூறியதுடன், மேலும், தனது சொந்த நாட்டில் எந்த ஒரு பதவியிலுமில்லாத ஒருவர் இன்னொரு நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவ்வளவு சரியல்ல என்று குறிப்பிட்டதாகவும் கூறப்படுகிறது.

அமெரிக்கா ஆலோசனை....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ரிக்க சர்க்கார் பல மாதங்களாக வேதான் ஆலோசித்து வருகிறது; ஆனால் இதுவரையிலும் எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை."

என்று, அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டல்லஸ் கூறியிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம. ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.